1975 மார்ச் 19]

திரு. அ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, அங்கே போக்குவரத்து அதிகமாக இருப்பதால் அந்தச் சாலை அடிக்கடி பழுதுபடுகிறது. ஆகவே மறுபரிசீலனை செய்து அந்தச் சாலையை அமைப்பதற்கு ஆவன செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இது ஏனைய மாவட்ட சாலையின்கீழ் வரக்கூடிய ஒன்று. 'Other than road works' அந்தத் திட்டத்தின்கீழ் பணம் சென்ற ஆண்டு ஒதுக்கப்படவில்லை. இதன் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்திருக்கிறது. சுற்றுலாத் துறை இதை ஏற்க வேண்டுமென்று கேட்டதற்கு, சுற்றுலாத் துறையினர் வேறு பணம் ஒதுக்க இயலாது என்று அந்தத் துறையிலே தெரிவித்திருக் கிறார்கள். இருந்தாலும் அரசாங்கம் அதைப்பற்றி பரிசீலனை செய்கிறது.

மோகனூர், காட்டுப்புத்தூர் கால்வாய்கள்

*379 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மோகனூர், காட்டுப்புத்தூர் ஆகிய கால்வாய்களை இணைப்பது பற்றி அரசு பரிசீலனை செய்து வருகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, கோடைகாலத்தில் காட்டுப்புத்தூர் வாய்க்காலில் வரும் தண்ணீர் வரத்து குறைந்துகொண்டே இருக்கிறது. ஆனால் மோகனூர் வாய்க்காலில் எப்பொழுதும் தண்ணீர் வருவது அதிகமாக இருக்கிறது. எனவே, இந்த இரண்டையும் இணைத் தால் பல ஆயிரம் ஏக்கர்கள் பயன் அடையும். இருக்கின்ற பயிரிடும் தலத்தையும் பாதுகாக்க முடியுமே. எனவே, இதைப்பற்றி மறுபரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இரண்டை யும் இணைத்தால் அந்தத் தண்ணீரைக் கொண்டு அதிக அளவு பாசனத் திற்குக் கொண்டுவரப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால் காவிரியி லேயே தண்ணீர் எவ்வளவு வர வேண்டுமென்று பிரச்னை இருக்கிறது. எனவே, இதைப்பற்றி இப்பொழுது யோசிப்பதற்கு நேரமில்லை.

Import of Wheat

* 380 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for; Food and Co-operation be pleased to state

(*a*) the steps taken by the Government to import more wheat from other States ; and

(*b*) the price of wheat imported ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) உபரி மாநிலங்களிலிருந்து கோதுமை இறக்குமதி செய்ய அரசு தடையில்லா சான்றிதழ்கள் வழங்கி வருகிறது.

(இ) அது அம்மாநிலங்களில் அவர்கள் கொடுக்கும் விலையைப் பொறுத்தது.

திரு. என். கே. பழனிசாமி : இப்போது கோதுமை வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்ய பல பேருக்கு அனுமதி கொடுக்கப் பட்டிருக்கிறது. சிவில் சப்ளைஸ் மூலமாக விநியோகிக்கப்படும் கோதுமையை விட அவர்கள் கோதுமை குறைவாக விற்கப்படுகிறது என்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதன் விலை அதிகமாக இருப்பது தான் பிரச்சினையே தவிர, விலை குறைவாக இருக்கிறது என்ற பிரச்சினை இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தக் கோதுமை மாவட்டங்களுக்கு எப்படி பகிர்ந்தளிக்கப்படுகிறது ? விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் அந்த மாவட்டத்திற்குத் தேவையான "ஃபுட் பட்ஜட்டை" கேட்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மத்திய அரசாங்கம் கொடுக்கிற கோதுமை பிரித்துக் கொடுக்கப் படுகிறது.

திரு. ஆலடி அருணா : வெளி மாநிலங்களில் இருந்து கோதுமை இறக்குமதி செய்வதில், பஞ்சாபில் இருந்து கோதுமை இறக்குமதி செய்ய தமிழக அரசுக்கு அனுமதி கிடைக்கவில்லை என்று கூறப்பட்டது. இப்போது வெளி மாநிலங்களில் இருந்து கோதுமை இறக்குமதி செய்ய அனுமதி இருக்கிறது என்று கூறுகிறார்கள். மத்திய அரசாங்கம் கொடுக்கிற 60,000 டன் கோதுமை போதாது என்ற வகையில் தனியாரும், அரசும் தேவை யான அளவு கோதுமையை வெளி மாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநில அரசுக்கு மத்திய அரசு கோதுமையை ஒதுக்குகிறது. இதைத் தவிர சில மாநிலங்களில் உபரியாகக் கோதுமை இருக்கிறது. அந்தக் கோதுமையைப் பொறுத்த அளவில் நாம் தனியாருக்கு இறக்குமதி செய்ய அனுமதி தருகிறோம். அவர்கள்